
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1165

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

155

**தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கு.சுல்தான் மொய்தீன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.**

# கு.சுல்தான் மொய்தீன் : தஞ்சைக் கழகத்தின் விதை நெல்!

1958-ஆம் ஆண்டு இறுதியில், அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டம். சாலை மறியல், கடையடைப்பு, பொது வேலை நிறுத்தம் எனத் தொடர்ச்சியாகக் கழகத் தோழர்கள் ஈடுபட்டு வந்தனர். 500-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். 51 நாட்களுக்கு மேல் நடைபெற்ற இந்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தி, முடிவுக்குக் கொண்டு வந்தவர் கலைஞர். கலைஞரோடு களத்தில் இருந்தவர்கள் எம்.எஸ்.மணி, மன்னை நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம், டி.கே.சீனிவாசன் ஆகியோர். அடித்தள மக்களின் அந்தப் போராட்டத்தில், கவனிக்கத்தக்க வகையில் இணைந்திருந்தவர் சுல்தான் மொய்தீன். தஞ்சையில் செல்வந்தர் வீட்டுப்பிள்ளையான சுல்தான், அந்தக் காலகட்டத்திலேயே கழகத்தின் தீவிர களப்பணியாளராக இருந்தவர்.

“வளமிக்க தஞ்சை மண்ணில் வறட்சி தென்பட்டாலும், எப்போதும் ஈர இதயத் தோடிருக்கும் இளம் பாரி. என் இதயக் களஞ்சியத்தில் சேமிப்பாய் வைத்திருக்கும் விதை நெல்மணிகளில் சுல்தானும் ஒருவர்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு.

தஞ்சை மாநகரில் இவரது மூதாதையர்கள் செல்வந்தர்களாகவும் மக்கள் செல்வாக்கு மிக்கவர்களாகவும் இருந்தவர்கள். உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும், நாட்டுப் பற்றும் சுதந்திர தாகம் கொண்டவர்களாகவும் விளங்கியவர்கள்.

ஜனாப் இ.எம்.குலாம் தஸ்தகீர் சாயபு, ஜனாபா இ.எம்.ஜி.நாசினிபேகம் ஆகியோரின் மூன்றாம் மகனாகப் பிறந்தவர். பி.ஏ. பட்டம் பெற்றவர். சுல்தானின் தந்தையாரும் பெரிய தந்தையாரும் தஞ்சை நகராட்சியில் ‘இரட்டைச் சிங்கங்கள்’ என அழைக்கப்பட்டவர்கள். அப்படியான குடும்பத்தில் இருந்து, பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரது எழுத்து, பேச்சு ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டு, 1950-ஆம் ஆண்டிலேயே கழகத்தில் இணைத்துக்கொண்டவர் சுல்தான்.

### தேர்தல் அலுவலகம்

1951-ஆம் ஆண்டில், தஞ்சையில் நடைபெற்ற கருப்புக்கொடி போராட்டம் தொடங்கி கழகத்தின் களப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கெடுத்தவர் சுல்தான். விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்பு என அனைத்து போராட்டங்களிலும் கழகத்தினரோடு முன்னணியில் நின்றவர்.

1953-இல், தஞ்சை பெரும்புயல் பாதிப்பின்போது, தமிழ்நாடு முழுவதில் இருந்தும் கழகத்தினரிடம் உதவிப்பொருட்களைத் திரட்டியது கழகம். அதைச் சேகரித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் மையமாக இருந்தது சுல்தான் இல்லம்.

1962-ஆம் ஆண்டு, தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராகக் கலைஞர் களம் கண்டபோது, அவருக்கு ஆதரவாக நின்றவர்களில் முதன்மையானவர். குறிப்பாக, தொகுதியில் கழகத்தின் அலுவலகமாக இயங்கியது சுல்தான் இல்லம்தான். கழகத் தோழர்கள் உபயதுல்லா உள்ளிட்டவர்களோடு இணைந்து, தலைவரின் வெற்றிக்குக் கண்துஞ்சாது இரவுபகலாகப் பாடுபட்ட கழக முன்னோடி.

செல்வச்செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும், அடித்தட்டு மக்கள், ஒடுக்கப்பட்ட மக்களிடம் இரண்டறக் கலந்து பழகக்கூடியவர். அனைத்துத் தரப்பு மக்களின் தேவையறிந்து, கல்வி, மருத்துவம் ஆகியவற்றுக்கு ஆரவாரமின்றி உதவி




செய்ததோடு, அவர்களின் இன்ப, துன்பங்களில் பங்குகொண்டு கழகத்தின் கொள்கையை உறுதியோடு பற்றி நின்றவர் என்கின்றனர் கழகத்தினர்.

ஐந்து முறை தஞ்சை நகர்மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்று முறை நகர்மன்றத் துணைத் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றியவர். 2001-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சை மக்கள் போற்றும் வண்ணம் பணியாற்றினார். ஒரே சமயத்தில் கூட்டுறவு வங்கியின் தலைவர், கூட்டுறவு பண்டகசாலை தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர் எனப் பல பொறுப்புகளை வகித்தவர்.

### எளிமையாளர்; பண்பாளர்

செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் எளிமையானவர்; எவ்வித ஆடம்பரத்தையும் விரும்பாதவர். தஞ்சை நகர்மன்றத் தலைவராக இருந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட கார், தொலைபேசி சேவைகள் ஆகியவற்றை மன்றப் பணி தவிர்த்து மற்ற பணிகளுக்குப் பயன்படுத்தாத பண்பாளர். பொதுத்தொண்டில் நேர்மை, உண்மை, உழைப்பு இவை மூன்றையும் உயிராய் மதித்துக் கடைப்பிடித்து, இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தவர். கழகத் தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு உறுப்பினராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தலைமைப் பொதுக்குழுவின் சிறப்பு அழைப்பாளராகவும் இருந்தவர்.

> **“ஆண்டு பல கடந்தாலும், சுல்தான் மொய்தீன் அவர்களின் கழக உணர்வை ஒவ்வோர் ஆண்டும் நினைவுகூர்ந்து பேசுகின்றனர்.”**

அனைத்து மதத்தினர், அனைத்துக் கட்சியினர், பல்வேறு தரப்பட்ட சமூகப் பொதுமக்களிடம் அன்பாக, மனிதநேயமிக்க ஈடுபாட்டுடன் தொண்டாற்றி வந்தவருக்கு 2001-ஆம் ஆண்டில், குடியரசு நாளன்று, தமிழ்நாடு அரசின் ‘கோட்டை அமீர்’ விருது அளித்துப் பாராட்டினார் கலைஞர்.

1993-ஆம் ஆண்டுவாக்கில், தஞ்சை மாவட்டக் கழகத்தின் பல முன்னணியினர் கழகத்தை விட்டுப் பிரிந்தபோது, சி.நா.மீ உபயதுல்லா, துறவி இளங்கோவன் உள்ளிட்ட உடன்பிறப்புகளுடன் கழகத்தைக் கட்டுக்கோப்பாக வைக்கத் துணை நின்றவர். “பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு, கழகத்தைக் கட்டிக்காப்பாற்றி, இந்தியா முழுவதும் ஒளிபரவச் செய்துவரும் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்தின் முன்நின்று, அவரைப் போன்று தொண்டாற்ற வலிமை வேண்டும் என ஒவ்வொரு நாளும் உறுதி எடுத்துக்கொள்வேன்” என்று கலைஞரின் முன் மேடையிலேயே கழகத்தின் உறுதியைப் பறைசாற்றியவர் சுல்தான் மொய்தீன்.

இவரது கழகத் தொண்டைப் பெருமைப் படுத்தும் வகையில், 2004-ஆம் ஆண்டில், தலைமைக் கழகத்தின் முப்பெரும் விழா விருதுகளில் ‘கலைஞர் விருதை’ அளித்துப் பாராட்டினார் தலைவர் கலைஞர்.

அடித்தட்டு மக்களால் இன்றும் ‘ஆண்டவன்’ என்றும் அழைக்கப்படுகின்ற மனிதநேயமிக்க மாமனிதர், சுல்தான் மொய்தீன். 2009-ஆம் ஆண்டு பிப்ரவரி 8-ஆம் தேதி, எதிர்பாராத விதமாக இயற்கை எய்தினார். கலைஞர் உடல்நலமின்றி இருந்த அந்த நாட்களில், சுல்தான் மறைவு அவருக்கு ஏற்பட்ட பெரும் துக்கம். கழகத்தினர் திரளாகக் கலந்துகொண்டு மரியாதை செய்தனர்.

ஆண்டு பல கடந்தாலும், சுல்தான் மொய்தீன் அவர்களின் கழக உணர்வை ஒவ்வோர் ஆண்டும் நினைவுகூர்ந்து பேசுகின்றனர் மாவட்டக் கழகத்தினர். அந்தப் பண்பாடு என்றென்றும் நிலைத்திருக்கும்; சுல்தான் நினைவில் நிற்பார்.

...துடிக்கும்

## ஜீரோ பி.ஜே.பி. - தேர்தல் அரசியலைக் கடந்த பொதுநலன்!

அ.தி.மு.க. முதுகின்மீது ஏறி சவாரி செய்துவரும் பா.ஜ.க., சட்டமன்றத் தேர்தலில் 27 இடங்களில் போட்டியிடுகிறது. நாடாளுமன்றத் தேர்தலைப்போல தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை மட்டுமல்ல, அதன் கூட்டணியையே ஒட்டுமொத்தமாகத் துடைத்தெறிய 234 தொகுதிகளிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் தீவிரமாகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், பா.ஜ.க.வை தமிழ்நாட்டில் பூஜ்ஜியமாக்க வேண்டும் என்ற இலக்குடன் ‘ஜீரோ பி.ஜே.பி.’ என்ற இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. ‘பன்முகத்தன்மை, கூட்டாட்சித் தத்துவம், அரசமைப்புச்சட்டம் ஆகியவற்றைச் சிதைக்கும் பா.ஜ.க.வின் செயல்பாடுகளை முறியடிக்க, அக்கட்சி போட்டியிடும் அனைத்துத் தொகுதிகளிலும் தோற்கடிக்கப்பட வேண்டுமென்பதே இதன் நோக்கம்’ எனத் தெரிவித்துள்ளார், ஓய்வுபெற்ற நீதிபதி அரிபரந்தாமன்.

இந்த இயக்கத்துக்கு ஆதரவு அளித்து, செய்தியாளர்களைச் சந்தித்த ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரும் பொருளாதார நிபுணருமான பரகலா பிரபாகர், “பா.ஜ.க.வுக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும், நமது அரசியலமைப்புச் சட்டம் போற்றிப் பாதுகாக்கும் விழுமியங்கள், மத நல்லிணக்கம், மொழி நல்லிணக்கம், பிராந்தியங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, கலாச்சார பன்முகத்தன்மைக்கு விழும் மரண அடியாகும். நீங்கள் என்ன சாப்பிட வேண்டும், என்ன உடை உடுத்த வேண்டும், எப்படிப் பேச வேண்டும், எந்த மொழியில் பேச வேண்டும், எந்த மொழியைப் பயில வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உங்கள் உரிமையை அது மறுக்கும்.

தமிழக மக்கள் வெறும் பா.ஜ.க.வை மட்டும் எதிர்த்துப் போராடப்போவதில்லை. அவர்கள் பா.ஜ.க., இந்தியத் தேர்தல் ஆணையம் உள்ளிட்ட ஒன்றிய அரசின் அனைத்து கண்காணிப்பு அமைப்புகளின் கூட்டு வலிமையையும் எதிர்த்துப் போராடத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இத்தகைய நச்சு சக்திகள் தமிழ்நாடு சட்டமன்றத்துக்குள் நுழையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்” என்றார். தேர்தல் அரசியலைக் கடந்த தமிழ்நாட்டின் பொதுநலனுக்கான முழக்கம், இந்த ஜீரோ பி.ஜே.பி. வெல்லட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



சூளை.பன்னீர்செல்வம்



### தலைவரைக் கண்ட மகிழ்ச்சி!

2009-ஆம் ஆண்டு, துணை முதலமைச்சராக இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்றபோது, தலைவரை வாழ்த்துவதற்கு, பகுதிக் கழகத்தினர் சென்றிருந்தோம். அந்த நிகழ்ச்சியை, ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சியும் ஒளிபரப்பியது. தளபதி அவர்கள் கழகத் தலைவரானபோதும், பின்னர் தமிழ்நாட்டின் முதலமைச்சரானபோதும் அதே அளவில்லா மகிழ்ச்சியை அடைந்தேன்.

**- சூளை.பன்னீர்செல்வம்,**
**எழும்பூர் வடக்குப் பகுதி,**
**சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மாநாட்டுக்கான இடம்!

1956-ஆம் ஆண்டு, கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, மே மாதம் 17-ஆம் தேதி முதல் 20-ஆம் தேதி வரை திருச்சியில் நடைபெற்றது. மாநாட்டுக்கு நிதி திரட்டும் பணிகள் 1955-ஆம் ஆண்டு, டிசம்பரிலேயே தொடங்கி விட்டாலும், மாநாடு நடைபெறும் இடம், நீண்ட பரிசீலனைக்குப் பின்னரே முடிவானது. திருச்சி ஜமால் முகமது கல்லூரி அருகே உள்ள ரேஸ் கோர்ஸ் திடலில் மாநாடு நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900